*கவனிக்க.- 2019.02.15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2112 - 2019 පෙබරවාරි මස 22 වැනි සිකුරාදා - 2019.02.22

*2112 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 470 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | | |
| பதவிகள் - வெற்றிடம் | - | | |



### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2019, மாச்சு மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, மாச்சு மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**மேல் மாகாண சபை கைத்தொழில் திணைக்களத்தில் போதனாசிரியர் III தரத்திலேயுள்ள பதவிக்காக ஆட்களை சேர்த்துக் கொள்ளல் - 2019**

01. மேல் மாகாண சபை கைத்தொழில் திணைக்களத்தில் போதனாசிரியர் III ஆம் தரத்திலேயுள்ள கீழ் காணப்படும் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த ஆண்/பெண் இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1.1 | ஆலோசகர் | (கும்பு) | 01 |
| 1.2 | ஆலோசகர் | (தச்சு) | 03 |
| 1.3 | ஆலோசகர் | (இலகுவான தொழில்) | 01 |
| 1.4 | ஆலோசகர் | (தோல்) | 01 |
| 1.5 | கணினி ஆலோசகர் | | 01 |
| 1.6 | ஆலோசகர் | (ஆடைகள்) | 13 |
| 1.7 | ஆலோசகர் | (கைத்தொழில்) | 01 |

02. **வெற்றிட எண்ணிக்கை : 2 1**

03. **விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2019.03.31**

04. **பொது நிபந்தனைகள் :**

4.1 விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.2 2019.03.31 ஆந் திகதியன்று 03 வருடங்கள் மேல் மாகாண எல்லைக்குள் நிரந்தரமாக வசித்து வந்தவராக இருத்தல் வேண்டும்.

4.3 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வருடங்களுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு கூடாமலும் இருப்போருக்கு விண்ணப்பிக்கலாம். ஆட்சேர்ப்பு இடம்பெறும் திகதியன்று அதி உச்ச வயது எல்லைக்கு மேற்படாதவாறு இருத்தல் அவசியம்.

4.4 திறமையான நல்லொழுக்கத்துடனும் நல்ல தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

05. **சேவை நிபந்தனைகள் :**

இச்சேவை நிரந்தரமானது. இளைப்பாற்றுச் சம்பளம் உடனானது. உமக்கு உரித்தான இளைப்பாற்றுச் சம்பள முறை சம்பந்தமாக அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படவிருக்கும் தீர்மானங்களுக்கு நீங்கள் உடன்பட வேண்டும். விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் நீங்கள் பங்குதாரர்களாக வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது எடுக்கப்படுகின்ற தீர்மானங்களுக்கேற்ப நீங்கள் அதற்கான கட்டணங்களைச் செலுத்தக் கடமைப்படுத்தப்படுவீர்கள். ஆட்சேர்ப்பு முறைமைக்கிணங்க சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் மேல் மாகாணத்தில் எந்தவொரு பகுதியிலும் வேலை செய்யத்தயாராக இருத்தல் வேண்டும்.

06. இப்பதவிக்குரித்தான மாதாந்த சம்பள அளவு அ. நிர். சுற். 03/2016 இற்கு ஏற்ப,
ரூபா 27,140 - 10X300 - 11X350 - 10X495 - 10X660 - ரூபா 45, 540 (சம்பள அளவுத்திட்டம் - MN - 1)

07. **கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :**

7.1 கல்வித் தகைமைகள்

(அ) க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் சிங்களம்/தமிழ் உட்பட 03 பாடங்களில் திறமை சித்தி உடன் கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி (ஒரே அமர்வில் குறைந்தது 05 பாடங்களாவது சித்தியடைந் திருத்தல் வேண்டும்.)

(ஆ) இலக்ரோனிக் போதனாசிரியர் தொழிலுக்காக விண்ணப்பிக்கும் போது க. பொ. த. (சா.த.) பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கில பாடங்களில் சாதாரண சித்தியடைந்திருப்பது அவசியமாகும்.

7.2 தொழில் தகைமைகள்
விண்ணப்பிக்கும் துறை சம்பந்தமாக அரச அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறியொன்றினை செய்து முடித்து சான்றிதழும் பெற்றிருத்தல் அவசியம்.

| தொ. இல. | பதவி | தொழிற் தகைமை |
|---|---|---|
| 01 | ஆலோசகர் (தச்சு வலை) | அரச அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தச்சுவேலை பயிற்சி நிறுவனமொன்றில் ஒரு வருட தச்சு பாடநெறி அல்லது ஒரு வருட தச்சுவேலை உயர் பயிற்சி பாடநெறியைப் பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் அவசியம். |
| 02 | பொறியியல் ஆலோசகர் (இலகுவான தொழில்) | அரச அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலகுவான பயிற்சி நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது ஒரு வருட பாடநெறியைப் பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் அசியம். |
| 03 | ஆலோசகர் (தோல், களிமண், தும்பு) | அந்தந்த தொழிற்றுரைகளுக்கு ஏற்ப அரச அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக் கப்பட்ட பயிற்சி நிறுவனமொன்றில் 06 மாத அல்லது அதற்கு மேற்பட்ட காலத்தில் பயிற்சி பெற்று சான்றிதழும் பெற்றிருத்தல் அவசியம். |
| 04 | கணினி ஆலோசகர் | மூன்றாம் நிலைக்கல்வி அல்லது தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) வினால் அங்கீகரிக்கப்பட்ட அரச அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பிரத்தியேக நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது ஒரு வருட கால கணினி டிப்ளோமா பயின்று இறுதிச் சான்றிதழ் பெற்றிருத்தல் அவசியம்.<br><br>அல்லது<br><br>மூன்றாம் நிலைக்கல்வி அல்லது தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) வினால் அங்கீகரிக்கப்பட்ட அரச அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பிரத்தியேக நிறுவனமொன்றில் கணிணி போதனாசிரியராக இரண்டு வருடங் களுக்குக் குறையாத காலப்பகுதியில் சேவை செய்திருத்தல் வேண்டும். |
| 05 | நெசவு ஆலோசகர் | நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தில் இரண்டு வருட பாடநெறியொன்றினை பூர்த்தி செய்து இறுதிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>அல்லது<br><br>நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தில் 06 மாத பாடநெறியொன்றுடன் நெசவுக் கைத்தொழில்/மேல் மாகாண கைத்தொழில் திணைக்களத்தில் உற்பத்தி நிறுவன மொன்றில் கைத்தொழிலாளராக 03 வருட வேலை அனுபவம் அவசியம். |
| 06 | தொழில்நுட்ப ஆலோசகர் | மூன்றாம் நிலை அல்லது தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) வினால் அங்கீகரிக்கப்பட்ட அரச அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பிரத்தியேக நிறுவனமொன்றில் இயந்திராதிகள் இயக்கம் சம்பந்தமாக இரண்டரை வருடங்கள் பயின்று இறுதிச் சான்றிதழ் பெற்றிருத்தல் அவசியம்.<br>குறிப்பு :- தேசிய தொழிற்றகைமை (NVQ) சான்றிதழ் - 4 ஆவது தரம் (NVQ 4) அல்லது அதற்கு மேலான தகுதியைப் பெற்றிருப்பது அவசியப்படுகின்றது. |

(சகல கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் 2019.03.31 ஆந் திகதிக்கு பூரணமாயிருத்தல் அவசியம். தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் எதுவித அறிவிப்புக்களுமின்றி செல்லுபடியற்றதாக்கப்படும்)

08. **ஆட்சேர்ப்பு முறை :**

8.1 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற உடனேயே விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சையொன்றிற்கு தோற்றுவிக்கப்படுவதனைத் தொடர்ந்து தகைமையுடையவர்கள் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நியமிக்கப்படுவார்கள்.

8.2 வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறின் எழுத்து மூல பரீட்சையொன்றின் பெறுபேற்றிற்கமைய நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவிக்கப்பட்டு குறிப்பிடப்பட்ட வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

8.2.1 எழுத்துமூலப் பரீட்சை

| தொ. இல. | பாடங்கள் | காலம் | அதிகூடிய அளவு | சித்தி பெறும் அளவு |
|---|---|---|---|---|
| 01. | பொது அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 02. | நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40 |

8.2.2 பரீட்சை சம்பந்தமான பாடவிதானம்

| தொ. இல. | கேள்விப்பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|---|
| 01. | பொது அறிவு | தேசிய, மாவட்ட மற்றும் உலகத்தில் பல்வேறு அமைப்புக்களில் இடம் பெறும் சமூக, கலாசார, கல்வி, விஞ்ஞானம், பொருளாதாரம் பற்றிய விண்ணப்பதாரியின் ஞானம் பரிசோதிக்கப்படக்கூடியதாக அமையும். |
| 02. | நுண்ணறிவுப் பரீட்சை | விண்ணப்பதாரியின் கருத்துக்கள் சரியானதாயும் தர்க்க ரீதியாக உணர்ந்து கொள்ளும் ஆற்றலும் கணித அறிவும் இப்பரீட்சையின் மூலம் பரிசோதிக்கப்படும். |

**09. பரீட்சைக் கட்டணம்**

9.1 பரீட்சைக் கட்டணம் ரூபா 600 ஆகும். இப்பரீட்சைக் கட்டணம் மேல் மாகாண சபை வருமான பட்டியல் 20.03.02.99 இற்கு வரவு வைக்கப்படுவதன் பொருட்டு அண்மையில் உள்ள பிரதேச செயலாளர் அலுவலகத்திற்குச் செலுத்தி பெற்றுக் கொள்ளப்படும் அ. ப. 1 பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்தல் வேண்டும். இவ்வாறு பெறப்பட்ட பற்றுச்சீட்டைத் தவிர வேறு ஏதேனும் நிறுவனங்களுக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட காசுக்கட்டளைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதோடு, ஏதேனும் காரணமொன்றினால் பரீட்சைக்குத் தோற்றாமல் அல்லது விண்ணப்பத்தை மீளப்பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளுக்கு மற்றும் பரீட்சைக்குத் தோற்றம் பெறுவதற்கு தகுதி இல்லை என உணரும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக் கட்டணமோ அல்லது அதன் ஒரு பகுதியோ திருப்பி வழங்கப்பட மாட்டாது. மேலும், இப்பரீட்சைக்கான கட்டணத்தை வேறு ஏதேனும் பரீட்சைக்கு மாற்றஞ் செய்யவோ இயலாது.

9.2 விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை இவ்வறிவித்தலின் இறுதியிலிருக்கும் மாதிரிக்கு ஏற்ப A4 அளவிலான (21 செ. மீ. x 29 செ.மீ ) தாள் ஒன்றின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி சரியாகவும் தெளிவாகவும் தயாரிக்க வேண்டும். விண்ணப்பம், விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே நிரப்பப்படல் வேண்டும்.

சகல விண்ணப்பதாரிகளும் தமது விண்ணப்பங்களை 2019.03.31 ஆந் திகதிக்கு முன்னர் நிறுவனத் தலைவரினூடாக குறிப்பிட்ட அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி செல்லுபடியற்றதாக்கப்படுவதோடு, விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற தகவல் அறிவிக்கப்படமாட்டாது.

9.3 விண்ணப்பதாரிகள் குறிப்பிட்ட அறிவித்தலின் பிரகாரம் தகைமைகள் பரீட்சிக்கப் படும் போது தேவையான தகைமை இல்லை என வெளிப்படுத்தப்பட்டால், அவரது பதவி வழங்கல் நிராகரிக்கப்படும். இவ் அறிவித்தலில் உள்ளதன் பிரகாரம் அல்லது இல்லாத ஏதேனும் வேறு விடயங்கள் சம்பந்தமான இறுதி முடிவு அமைச்சு செயலாளரையே சாரும்.

கே. சம்பா என். பெரேரா,
செயலாளர்,
மாகாண தெருக்கள், போக்குவரத்து, கூட்டுறவு, அபிவிருத்தி
மற்றும் வியாபார, வீடமைப்பு நிர்மாண, அடிப்படை வசதி,
கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அலுவல்கள் அமைச்சு,
மேல் மாகாணம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மேல் மாகாண கைத்தொழில் திணைக்களத்தில் ஆலோசகர் III ஆம் தரத்திலான பதவிக்கு ஆட்சேர்த்தல் - 2019**

பரீட்சை இலக்கம் : [ ]

( அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம் )

(உத்தியோகத்தரினால் நிரப்பப்பட வேண்டியது)

[ ]

விண்ணப்பிக்கும் பதவி

01. i. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில் ) : ..........................................................................................

ii. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் (ஆங்கிலத்தில்) : ..........................................................................
(கெபிட்டல் எழுத்துக்களினால்)

iii. முழுப்பெயர் (சிங்களத்தில்) : ..........................................................................................

..........................................................................................

iv. முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) : ..........................................................................................

..........................................................................................

v. தேசிய ஆளடையாள அட்டை இல. : [ | | | | | | | | | | | ]

02. i. நிரந்தர முகவரி (சிங்களத்தில்) : ..........................................................................................

..........................................................................................

ii. நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்) : ..........................................................................................
(கெபிட்டல் எழுத்துக்களினால்)

..........................................................................................

iii. நிரந்தர வதிவு மாவட்டம் (கூட்டினுள் ✓ அடையாளமிடுக) :

கொழும்பு [ ] கம்பஹா [ ] களுத்துறை [ ]

iv. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான 2019.03.31 ஆந் திகதிக்கு மேல் மாகாண சபை பிரதேசத்தில் நிரந்தர வதிவு :
வருடங்கள் ........................ மாதங்கள் ........................ நாட்கள் ........................

v. தொலைபேசி இல. :
தனிப்பட்ட ........................................ உத்தியோக ..............................................

03. பால் : ஆண்/பெண் : ( கூட்டினுள் ✓ அடையாளமிடுக )

பெண் [ ] ஆண் [ ]

04. i. பிறந்த திகதி : ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

ii. 2019.03.31 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் [ ][ ][ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

05. பரீட்சைக்குத் தோற்றும் மொழி : (கூட்டினுள் ✓ அடையாளமிடுக )

சிங்களம் [ ] தமிழ் [ ] ஆங்கிலம் [ ]

06. கல்வித் தகைமைகள் : (விண்ணப்பப் படிவங்களின் அறிவுறுத்தல்களின் 07 ஆம் பந்தியின் பிரகாரம்)

6.1. க.பொ.த. ( சா.த. ) பரீட்சை :

முதலாம் அமர்வு

வருடம் : ............ பரீட்சை சுட்டெண்: ..............

| தொ. இல. | பாடங்கள் | பெற்றுள்ள தரம் |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |
| 03. | | |
| 04. | | |
| 05. | | |
| 06. | | |
| 07. | | |
| 08. | | |

இரண்டாம் அமர்வு

வருடம் : ............ பரீட்சை சுட்டெண்: ..............

| தொ. இல. | பாடங்கள் | பெற்றுள்ள தரம் |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |
| 03. | | |
| 04. | | |
| 05. | | |
| 06. | | |
| 07. | | |
| 08. | | |

6.2. அறிவுறுத்தல்களின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் விண்ணப்பிக்கின்ற பதவிக்கு ஏற்புடைத்தான தொழில் மற்றும் அனுபவம் சம்பந்தமான தகைமைகள் :

6.2.1. பயிற்சி நெறியின் பெயர் : ..................................................................................

பயிற்சிக்காலம்: ........................................இருந்து ....................................................

நிறுவனம்: ....................................................................................................

சான்றிதழின் காலக் கெடு : .............................................................................

6.2.2. அனுபவ விபரம்: ..........................................................................................

பயிற்சிக் காலம்: ........................................இருந்து ....................................................

07. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு இலக்கம் :………………………………………………………………………

பிரதேச செயலாளர் அலுவலகம்:……………………………………………………………………………………………

திகதி:…………………………………………………

இந்த இடத்தில் பற்றுச் சீட்டை உறுதியாக ஒட்டவும்)

8. ……………………………………………… ஆகிய என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் சரியென பகிர்கிறேன். இதில் ஏதேனும் பிழை என்று தெரியவரின் நான் தகுதியற்றவனாக்கப்படுவதற்கும், எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும் உள்ளாவேன் என நன்கு அறிவேன்.

……………………………………….
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :………………………….

9. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் (அவசியமற்ற வசனங்களை நீக்கவும்)

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி …………………………………… என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் …………………. ஆந் திகதி அவரின் கையொப்பத்தை இட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் :……………………………………………………………...

பதவி :…………………………………...……………………….

முகவரி :……………………………………………………………...

திகதி :…………………………..…………………………..……..…….

(இந்த உறுதி செய்தல், அரசாங்க பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சத்திய பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி யொருவர்/ தரைப்படை அல்லது விமானப் படை அதிகாரி அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவர் அல்லது வருடத்திற்கு ரூ. 237,060.00 இற்கு குறையாத மொத்த சம்பளம் பெறுகின்ற நிரந்தர பதவியிலுள்ள அரச/மாகாண சேவையிலுள்ள அதிகாரி யொருவரின் மூலம் அத்தாட்சிப்படுத்த முடியும்.)

02 - 649

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.